பின் வருவனவற்றை அவை உருவாக்கப்பட்டதின் ஏறு வரிசையில் எழுது :

I. திட்ட ஆணையம்
II. மண்டல குழுக்கள்
III. தேசிய ஒருமைப்பாடு குழு
IV. தேசிய வளர்ச்சி குழு

(A) I – II – III – IV
(B) I – IV – III – II
(C) I – IV – II – III
(D) I – III – IV – II

பின்வரும் குழுக்களை காலகிரமப்படி வரிசைப்படுத்துக

1. கோர்வாலா குழு
2. அய்யங்கார் குழு
3. ஃஆப்பில்பே அறிக்கை
4. நிர்வாக சீர்திருத்த ஆணையம்

(A) 1–3–2–4
(B) 2–3–1–4
(C) 2–1–3–4
(D) 3–1–2–4

பிரிக்கப்படாத இந்தியாவின் அரசியலமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் எப்பொழுது நடைபெற்றது?

(A) 9 நவம்பர், 1946
(B) 9 டிசம்பர், 1946
(C) 9 அக்டோபர், 1946
(D) 9 செப்டம்பர், 1946

நாகாலாந்து மாநிலம் எப்பொழுது உருவாக்கப்பட்டது?

(A) 1961 (B) 1963

(C) 1965 (D) 1967

74 வது திருத்த சட்டத்தின் மூலம் பின்வரும் எந்த அட்டவணை சேர்க்கப்பட்டது?

(A) 12-வது அட்டவணை (B) 11-வது அட்டவணை

(C) 13-வது அட்டவணை (D) 10-வது அட்டவணை

பின்வரும் எந்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, இந்தியாவின் தற்காலிக குடியரசு தலைவராக செயல்பட்டுள்ளார்?

(A) நீதிபதி கப்பாராவ் (B) நீதிபதி M. இதயதுல்லா

(C) நீதிபதி Y.V. சந்திரசூட் (D) நீதிபதி P.N. பகவதி

1868 ஆம் ஆண்டில், இந்தியாவின் தேசிய வருவாய் மதிப்பீட்டுக் குழுவினைத் தலைமை தாங்கியவர்

(A) V. K. R.V. ராவ் ஆவார் (B) ஷா மற்றும் கம்பட் ஆவார்

(C) தாதாபாய் நௌரோஜி ஆவார் (D) W.C. பீட்டர்சன் ஆவார்

இந்த உற்பத்தி மேம்பாட்டு திறனை வெளிக்கொணர, பாரத நிர்மான் திட்டம் தொடங்கப்பட்டது?

(A) இந்திய பத்திர சந்தை

(B) பொதுத்துறை நிறுவனங்களின் பொறுப்பேற்புப் பணி

(C) நகர்புற இந்தியா

(D) கிராமப்புற இந்தியா

இந்திய தனித்துவ அடையாள ஆணையம் எப்போது முதல் ஆதார் அட்டையை உ( பாக்கியது?

(A) ஆகஸ்ட் 29, 2009 (B) செப்டம்பர் 26, 2011

(C) செப்டம்பர் 29, 2010 (D) அக்டோபர் 25, 2010

கீழ்வருபனவற்றை பொருத்தி சரியான விடையை தேர்வு செய்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு பணிகள் | 1. | 2002 |
| (b) | தேசிய ஊரக சுகாதாரப்பணித் திட்டம் | 2. | 1975 |
| (c) | தேசிய சுகாதாரக் கொள்கை | 3. | 1986 |
| (d) | தேசிய கல்விக் கொள்கை | 4. | 2005 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |

அகில இந்திய மாநில மக்கள் குழுவின் தலைமை பொறுப்பை 1946–47 ஆம் ஆண்டுகளில் வகித்தவர் யார்?

(A) சர்தார் வல்லபாய் பட்டேல்

(B) பண்டித ஜவகர்லால் நேரு

(C) டாக்டர். இராஜேந்திர பிரசாத்

(D) வி.பி. மேனன்

அரசியலமைப்பு நிர்ணய சபையின் வழிகாட்டு குழுவின் தலைவர் யார்?

(A) ஜவகர்லால் நேரு

(B) K.M. முன்சி

(C) H.C. முகர்ஜி

(D) ராஜேந்திர பிரசாத்

இந்திய அரசியலமைப்பின் எந்த விதி ஆரம்பக் கல்வியுரிமையோடு தொடர்புடையது?

(A) விதி 20 (a)

(B) விதி 21 (a)

(C) விதி 22 (a)

(D) விதி 21

பின்வரும் கூற்றினை, அதற்கு உகந்த தேர்வுகளோடு பூர்த்தி செய்து, சரியான தெரிவினை தேர்ந்தெடு.

மாநில தலைமை தகவல் ஆணையரை நியமிக்க ஆளுநருக்கு பரிந்துரை செய்யும் குழு இவற்றை உள்ளடக்கியது

1. முதல் அமைச்சர்
2. சட்டமன்ற எதிர்கட்சி தலைவர்
3. முதலமைச்சரால் முன்மொழியப்படும் கேபினட் அமைச்சர்
4. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

(A) 1 மற்றும் 2 மட்டும் (B) 1, 2 மற்றும் 4 மட்டும்

(C) 1, 2 மற்றும் 3 மட்டும் (D) 1, 3 மற்றும் 4 மட்டும்

இந்தியாவின் உச்சநீதிமன்றம் எப்பொழுது திறந்து வைக்கப்பட்டது?

(A) ஜனவரி 26, 1950 (B) ஜனவரி 28, 1950

(C) பிப்ரவரி 28, 1950 (D) ஏப்ரல் 26, 1950

இந்திய பாராளுமன்றத்தின் பொதுக் கணக்கு குழு தலைவரை நியமனம் செய்பவர் யார்?

(A) பிரதம மந்திரி

(B) மக்களவை சபாநாயகர்

(C) பாராளுமன்ற விவகார அமைச்சர்

(D) பாராளுமன்ற விவகார குழு

எந்த அரசியலமைப்பு சட்டத்தின் மூலமாக குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தின் அவைகளை கூட்டுவதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கு அதிகாரம் உள்ளது?

(A) விதி 75 (B) விதி 81

(C) விதி 85 (D) விதி 88

கீழ்வருபனவற்றை பொருத்தி சரியான விடையை தேர்வு செய்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | நிர்மல் பாரத் அபியான் | 1. | ஊரக சாலைகள் |
| (b) | பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா | 2. | அனைத்து வாழ்விடங்களுக்கும் அடிப்படை கட்டமைப்பு வசதி செய்து தருதல் |
| (c) | கிராம கட்டமைப்பு திட்டம் | 3. | கிராம சுகாதாரம் |
| (d) | தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு திட்டம் | 4. | மகாத்மா காந்தி வேலை உறுதி திட்டத்தில் உருவாக்கப்பட்ட சொத்துக்களை நிலைப்படுத்துதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |

பின்வரும் நிதி ஆணையங்களில், மத்திய அரசின் அனைத்து வரிகளின் நிகர வருமானத்தினை மாநிலங்களுக்கு அதிகார பகிர்வு வழங்க பரிந்துரை செய்த ஆணையம் எது?

(A) 8வது நிதி ஆணையம்

(B) 11வது நிதி ஆணையம்

(C) 10வது நிதி ஆணையம்

(D) 9வது நிதி ஆணையம்

எந்த இந்திய அரசியலமைப்பு பஞ்சாயத்து ராஜ் திருத்தச்சட்டம் பிரிவு I–ன் படி, 1/3–ல் பங்கு இடம் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் பெண்களுக்கான இடம் ஒதுக்கப்பட வேண்டும் என குறிக்கிறது?

(A) 73–வது சட்டத்திருத்தம்
(B) 74–வது சட்டத்திருத்தம்
(C) 75–வது சட்டத்திருத்தம்
(D) 76–வது சட்டத்திருத்தம்

இந்திய திட்ட குழுவின் தலைவர் யார்?

(A) இந்திய குடியரசு தலைவர்
(B) இந்திய பிரதம மந்திரி
(C) இந்திய நிதி அமைச்சர்
(D) இந்திய துணை குடியரசு தலைவர்

மாநகராட்சியின் அரசியல் ரீதியான தலைவர்

(A) சேர்மேன்
(B) ஆணையர்
(C) கவுன்சிலர்
(D) மேயர்

இந்திய தேர்தல் ஆணையம் ஒரு

(A) சுதந்திரமான அமைப்பு
(B) சட்டபூர்வ அமைப்பு
(C) தனியார் அமைப்பு
(D) பொது நிறுவனம்

ஜம்மு – காஷ்மீர் சட்டமன்றத்தின் பதவி காலம்

(A) 4 ஆண்டுகள்
(B) 5 ஆண்டுகள்
(C) 6 ஆண்டுகள்
(D) 7 ஆண்டுகள்

கீழே உள்ளவற்றைக் கொண்டு சரியான விடையளி.

கூற்று (A) : கட்டுப்பாடில்லாமையே சுதந்திரம் என்று பேராசிரியர் சீலி கூறுகிறார்.

காரணம் (R) : சுதந்திரம் என்பது உரிமைகளின் வழி வந்தது. நல்ல ஒழுக்கமுள்ள சமுதாயத்தில் கட்டுபாடின்றி செய்வதற்கு ஏதுவாக இருப்பதே சுதந்திரம்.

(A) (A) மற்றும் (R) இரண்டும் உண்மை

லோக் அதாலத் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

(A) 1950
(B) 1987
(C) 1984
(D) 2000

இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் உள்ளடங்கியுள்ள பகுதி

(A) பகுதி IV
(B) பகுதி III
(C) பகுதி II
(D) பகுதி I

கீழ்க்காணும் வாக்கியங்களைக் கவனி :

கூற்று (A) : தகவல் அறியும் சட்டம், 2005 ஆம் ஆண்டு அக்டோபர் 12ஆம் நாள் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.

காரணம் (R) : தகவல் அறியும் சட்டம் மக்களின் அடிப்படை உரிமை என பாராளுமன்றத்தால் சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி

தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்ட ஆண்டு

(A) 1997 (B) 1998 (C) 1999 (D) 2000

பின்வருவனவற்றை பொருத்துக :

(a) வாக்களிக்கும் வயது — 1. தேர்தல் ஆணையம்

(b) சின்னங்கள் ஒதுக்குவது — 2. 18 ஆண்டுகள்

(c) வெளிப்படையான வாக்குப்பதிவு — 3. 42வது திருத்தச் சட்டம்

(d) அடிப்படைக் கடமைகள் — 4. கைகளை உயர்த்துதல்

(B) 2 1 4 3

உயர்நீதிமன்ற நீதிபதியின் வயது வரம்பு

(A) 60 (B) 62

(C) 65 (D) 70

அரசியலமைப்பு வரைவுக் குழுவின் தலைவர்

(A) டாக்டர். பி. ஆர். அம்பேத்கார் (B) டாக்டர். சின்கா

(C) டாக்டர். இராஜேந்திர பிரசாத் (D) ஜவஹர்லால் நேரு

கீழ்க்கண்ட அனைத்து இணைகளும் இந்தியாவில் கல்வி வரலாறு மற்றும் அதன் வருடங்கள் பற்றியது. இதில் எது தவறான இணை?

(A) ரேலி குழுவின் பரிந்துரைகள் — 1880-82

(B) உட்ஸ் அறிக்கை — 1854

(C) ஹண்டர் குழு — 1882

(D) சார்ஜென்ட் கல்வி திட்டம் — 1944

இந்திய அரசியலமைப்பின் பத்தாவது அட்டவணை எதை குறிக்கின்றது?

(A) மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பெயர்கள்

(B) கட்சி தாவல் தடை

(C) பஞ்சாயத்து நிறுவனங்கள்

(D) நகர்பாலிகா

இந்திய அரசியலமைப்பின் 351-வது விதி கீழ்க்கண்ட ஒன்றின் வளர்ச்சிக்கான வழிகாட்டுதலைப் பற்றியது.

(A) இந்தி மொழி (B) வட-கிழக்கு பிராந்தியங்கள்

(C) மலைப்பகுதிகள் (D) கடற்கரைப் பிராந்தியங்கள்

ஸ்வரன் சிங் குழு (1976) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எந்த அம்சத்தை ஒரு தனி பகுதியாக்க கொண்டு வர பரிந்துரை செய்தது?

(A) அடிப்படை உரிமைகள்

(B) அடிப்படை கடமைகள்

(C) அரசியலமைப்பு நெறிகள்

(D) அரசியலமைப்பு மனு முறை

இந்திய ஜனாதிபதி தேர்தல் குழாம் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று கூறும் இந்திய அரசியலமைப்பு விதி யாது?

(A) விதி 50 (B) விதி 52

(C) விதி 54 (D) விதி 56

பாராளுமன்றத்தின் ஈரவைகளிலும் ஒவ்வொரு அமர்வின் முதல் மணி நேரத்தை என்ன கூற வேண்டும்?

(A) முழு நேரம் (B) பூஜ்ய நேரம்

(C) கேள்வி நேரம் (D) தீர்மான நேரம்

இட ஒதுக்கீட்டுடன் தொடர்புடைய 'பிறப்பிடம்' என்ற சொல் இந்திய அரசியலமைப்பின் எந்த விதியில் காணப்படுகிறது?

(A) அரசியலமைப்பு விதி 15 (B) அரசியலமைப்பு விதி 18

(C) அரசியலமைப்பு விதி 272 (D) அரசியலமைப்பு விதி 273

டெல்லி என்ற யூனியன் பிரதேசத்தை இந்தியாவின் தேசிய தலைநகரம் என்று அங்கீகரித்த அரசியலமைப்பு சீர்திருத்தச் சட்டம் யாது?

(A) 67 வது அரசியலமைப்பு திருத்த சட்டம் (B) 69 வது அரசியலமைப்பு திருத்த சட்டம்

(C) 78 வது அரசியலமைப்பு திருத்த சட்டம் (D) 80 வது அரசியலமைப்பு திருத்த சட்டம்

தமிழக அரசு ராஜமன்னார் குழுவை அமைத்ததன் காரணம் யாது?

(A) மத்திய-மாநில உறவுகள் (B) ஜனதொகை கொள்கை

(C) ஆளுநரின் அதிகாரங்கள் (D) மொழி பிரச்சனைகள்

ஹேபியஸ் கோர்பஸ் என்றால் "ஆட்கொணர்க" அதே போல் 'மேன்டமஸ்' என்றால் "__________"

(A) தடை விதித்தல் (B) கட்டளையிடுதல் (உறுத்தாணை)

(C) அதிகார எல்லையை வினவுதல் (D) சான்றளித்தல்

அகில இந்திய சேவையை அமைக்கும் இந்திய அரசியலமைப்பு விதி யாது?

(A) 312 வது விதி (B) 309 வது விதி

(C) 310 வது விதி (D) 311 வது விதி

அரசியலமைப்பு திருத்தல் முறையை இந்திய அரசியல் சாசனத்தின் எந்த விதி வழங்குகிறது?

(A) 360 வது விதி
(B) 343 வது விதி
(C) 368 வது விதி
(D) 352 வது விதி

இந்திய அரசியலமைப்பின் 360வது விதியுடன் தொடர்புடையது

(A) போர், வெளிநாட்டு படையெடுப்பு, மற்றும் ஆயுதமேந்தி கலகம் விளைவித்தலால் அவசரநிலை
(B) மாநில அளவில் அவசர நிலை
(C) நிதி சார்ந்த அவசர நிலை
(D) இவை அனைத்தும்

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | G.V. மாவலங்கர் | 1. | இந்தியாவின் முதல் தலைமை தணிக்கை மற்றும் கட்டுப்பாட்டாளர் |
| (b) | சுகுமார் சென் | 2. | இந்தியாவின் முதல் துணை பிரதமர் |
| (c) | V. நரஹரி ராவ் | 3. | இந்தியாவின் முதல் தலைமை தேர்தல் ஆணையர் |
| (d) | சர்தார் வல்லபாய் படேல் | 4. | இந்தியாவின் முதல் சபாநாயகர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 3 | 1 | 2 |

1985–ல் இயற்றப்பட்ட கட்சி தாவல் தடை சட்டம், இந்திய அரசியலமைப்பின் —— அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது.

(A) அட்டவணை VIII
(B) அட்டவணை IX
(C) அட்டவணை X
(D) அட்டவணை XI

எந்த இரண்டு குழுக்கள் பாராளுமன்றத்தின் நிதி சார்ந்த விஷயங்களுக்காக அமைக்கப்படுகின்றன?

(a) வர்த்தக ஆலோசனை குழு

(b) மதிப்பீடுகள் குழு

(c) தெரிவுக் குழு

(d) பொது கணக்குக் குழு

(A) (a) மற்றும் (b)
(B) (b) மற்றும் (c)
(C) (b) மற்றும் (d)
(D) (c) மற்றும் (d)

சட்டமியற்றும் முறையில் தேவையை ஒரு ரூபாய் குறைக்குமாறு ஒரு வெட்டுத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் அது ———— ஆகும்.

(A) பொருளாதார வெட்டு

(B) டோக்கன் வெட்டு

(C) கொள்கை மறுப்பு வெட்டு

எந்த வழக்கில், இந்திய உச்ச நீதிமன்றம், முகவுரை என்பது இந்திய அரசியல் சாசனத்தின் ஒரு பகுதி தான் என்று தீர்ப்பு வழங்கியது?

(A) கோலக்நாத் வழக்கு

(B) கேசவநந்தா பாரதி வழக்கு

அட்டவணையில் சேர்க்கப்பட்ட வங்கிகள் எந்த அட்டவணையில் இடம் பெற்றுள்ளது

(A) முதல் அட்டவணை, இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934

(B) இரண்டாம் அட்டவணை, இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934

கீழ்க்காணும் மாநிலங்களை அவற்றின் குழந்தை பாலின விகிதத்துடன் (2011 மக்கள் தொகைப்படி) பொருத்துக

| | மாநிலம் | | குழந்தை பாலின விகிதம் |
|---|---|---|---|
| (a) | கேரளா | 1. | 946 |
| (b) | ஹரியானா | 2. | 899 |
| (c) | தமிழ்நாடு | 3. | 959 |
| (d) | உத்தர பிரதேசம் | 4. | 830 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

இரட்டை இடர்பாடு என்பது இந்திய அரசியலமைப்பின் எந்த விதியின் கீழ் வருகின்றது?

(A) விதி 21(1)
(B) விதி 20(2)
(C) விதி 32(1)
(D) விதி 226(2)

ஆட்சேர்ப்பு முறையில் மாற்றம் ஏற்படுத்துவதற்காக ஒன்றிய பொதுப்பணியாளர் தேர்வாணையம், 1974 ம் ஆண்டில் தேர்வு மற்றும் ஆட்சேர்ப்பு குழு ஒன்று யார் தலைமையில் அமைத்தது?

(A) G.D. கோசலா
(B) J.C. ஷா
(C) R.C. லஹோடி
(D) D.S. கோத்தாரி

கீழே காணப்படும் ஆணையங்களை தன் நோக்கத்துடன் இணைத்து சரியான விடையை தேர்வு செய்யவும்.

| | ஆணையம் | | நோக்கம் |
|---|---|---|---|
| (a) | கலேல்கர் ஆணையம் | 1. | காந்தி கொலை வழக்கு |
| (b) | கபூர் ஆணையம் | 2. | மத்திய–மாநில உறவுகள் |
| (c) | சர்காரியா ஆணையம் | 3. | 1984, சீக்கிய எதிர்ப்பு கலவரம் |
| (d) | நாநாவதி ஆணையம் | 4. | பின்தங்கிய வகுப்பினர் ஆணையம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 1 | 2 | 3 |

மாநில அரசின் சட்ட ஆலோசகர் யார்?

(A) அட்டர்னி ஜெனரல்

(B) மாநிலத்தின் தலைமை வழக்கறிஞர்

குடியுரிமையை பற்றிய விதி இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் ———— பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(A) விதி 5 முதல் 11 வரை பகுதி II

இந்திய அரசியலமைப்பின் ஒன்றாம் விதி (Art. 1) இந்தியாவை எவ்வாறு குறிப்பிடுகிறது?

(A) குடியரசு

(B) சமதர்ம மக்களாட்சி

(C) மாநிலங்களின் ஒன்றியம்

(D) மதசார்பற்ற நாடு

மக்களவை மற்றும் மாநில அரசு தேர்தல்கள் வயதுடையோர் வாக்குரிமை முறை மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தும் இந்திய அரசியலமைப்பு விதி எது?

(A) விதி 146

(B) விதி 326

இந்திய குடியரசுத் தலைவர் மறைமுகமாக தேர்வாளர் குழு மூலம் தேர்ந்தெடுக்கின்றோம். தேர்வாளர் குழுவில் பின்வரும் எந்த உறுப்பினர்கள் கலந்து கொள்வதில்லை?

(A) தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவை உறுப்பினர்கள்

(B) தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களவை உறுப்பினர்கள்

(C) தேர்ந்தெடுக்கப்பட்ட யூனியன் பிரதேச சட்டப் பேரவை உறுப்பினர்கள்

பொருத்துக :

(a) மக்களவை — 1. 35 வருடம்

(b) மாநிலங்களவை — 2. 25 வருடம்

(c) துணை குடியரசுத் தலைவர் — 3. 21 வருடம்

(d) பஞ்சாயத்து தலைவர் — 4. 30 வருடம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

நீதிபதிகள் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படும் வழக்கம் நடைமுறையில் உள்ள நாடு

(A) இங்கிலாந்து
(B) சுவிட்சர்லாந்து
(C) பிரான்ஸ்
(D) அமெரிக்கா

1967 முதல் 1969 வரை இந்தியாவின் குடியரசு தலைவராக பதவி வகித்தவர் யார்?

(A) திரு. V.V. கிரி
(B) டாக்டர். ஜாகிர் ஹுசைன்

இந்திய அரசாங்கத்தின் அலுவலக மொழி எது?

(A) ஆங்கிலம்
(B) இந்தி
(C) அனைத்து மொழிகள்
(D) ஆங்கிலம் மற்றும் இந்தி

எத்தனையாவது அரசியலமைப்பு திருத்தத்தின் படி, நம் இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் "இந்தியாவின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு" சேர்க்கப்பட்டது?

(A) 43 வது அரசியலமைப்பு திருத்தம்
(B) 40 வது அரசியலமைப்பு திருத்தம்
(C) 46 வது அரசியலமைப்பு திருத்தம்
(D) 42 வது அரசியலமைப்பு திருத்தம்

Dr. அம்பேத்கர் கருத்துப்படி அரசியலமைப்பின் எந்த விதி "அரசியலமைப்பின் இதயமும், உயிருமாகும்"?

(A) விதி 24
(B) விதி 23
(C) விதி 32
(D) விதி 42

கீழ்க்காணும் நகரங்களில் எது "இந்தியாவின் முதல் முனிசிப்பல் கார்ப்பரேஷன்"?

(A) டெல்லி (புது டில்லி)
(B) கல்கத்தா (கொல்கொத்தா)
(C) பம்பாய் (மும்பை)
(D) மதராஸ் (சென்னை)

இந்தியாவில் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க எந்த வாக்களிப்பு முறை கையாளப்படுகிறது?

(A) ஒரு நபருக்கு ஒரு வாக்கு
(B) பன்மை வாக்கு
(C) ரகசிய வாக்கு

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது

(A) 62 (B) 65

இந்திய தேர்தல் ஆணையம் அமைந்துள்ள இடம்

(A) மும்பை (B) சென்னை (C) புது டில்லி

ராஜ்ய சபைக்கு எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?

(A) 530 (B) 238 (C) 545

மாநில சமூக இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் அடிப்படை உரிமையில் முதல் சட்ட திருத்தத்தை கொண்டு வந்தவர்

(A) வி.வி. சுப்பிரமணிய ஐயர் (B) மகாத்மா காந்தி

(C) டாக்டர். முத்துலட்சுமி (D) பண்டித ஜவஹர்லால் நேரு

கீழ்வருவனவற்றை பொருத்துக :

(a) பாராளுமன்ற முறை அரசாங்கம் 1. சுவிட்சர்லாந்து

(b) தலைவர் முறை அரசாங்கம் 2. இங்கிலாந்து

(c) குழு முறை அரசாங்கம் 3. ஜெர்மனி

(d) சர்வாதிகார முறை அரசாங்கம் 4. அமெரிக்கா

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 4 | 1 | 3 |

மாநிலத் தேர்தல் ஆணையாளரை நியமனம் செய்பவர்

(A) முதலமைச்சர்

(B) குடியரசுத் தலைவர்

(C) மாநில ஆளுநர்

கீழ்கண்ட வாக்கியங்களை கவனி.

கூற்று (A) : சட்டம் இயற்றுவது சட்டமன்றத்தின் பணியாகும்.

காரணம் (R) : மக்களாட்சியில், மக்களுடைய பிரதிநிதிகளே சட்டம் இயற்றுபவர்களாக இருக்கிறார்கள். இது மக்களாட்சியின் சிறந்த பண்பாகும்.

சரியான விடையைத் தேர்ந்தெடு.

(A) (A) மற்றும் (R) இரண்டும் தவறானவை

(B) (A) தவறு (R) உண்மை

(C) (A) உண்மையானது (R) தவறானது

(D) (A) மற்றும் (R) இரண்டும் உண்மை

பின்வரும் எந்த விதிகள் அரசியலமைப்பின் பகுதி IV-ல் 42-வது திருத்த சட்டத்தின் மூலம் சேர்க்கப்பட்டது?

(A) விதி 39-A மற்றும் 43-A (B) விதி 38-ல் உட்பிரிவு (2)

(C) விதி 37-A மற்றும் 43-A (D) விதி 31C மற்றும் விதி 37A

14 மே மாதம் 1954-ம் ஆண்டு மக்களவை இனிமேல் "லோக்சபா" என்று அழைக்கப்படும் என்று கூறியவர் யார்?

(A) ஜி. வி. மாவ்லங்கர் (B) டாக்டர். S. இராதாகிருஷ்ணன்

இந்திய தேசிய சின்னத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள 'சத்யமேவ ஜெயதே' என்ற சொற்கள் எங்கிருந்து பெறப்பட்டுள்ளன?

(A) மைத்ரேயி உபநிடதம் (B) முண்டக உபநிடதம்

இந்திய அரசியலமைப்பின் 148 வது விதி வலியுறுத்துவது

(A) தலைமை மற்றும் தணிக்கை அதிகாரி இந்திய ஜனாதிபதியால் நியமனம் செய்யப்படுவது பற்றி

352 வது விதியின் படி நான்காவது அவசர நிலை பிரகடனம் வந்த ஆண்டு

(A) 1962 (B) 1965 (C) 1971 (D) 1975

மனித உரிமை பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு

(A) 1992 (B) 1993 (C) 1994

ஜார்கண்ட், உத்தராஞ்சல் மற்றும் சட்டீஸ்கர் ஆகிய மூன்று புதிய மாநிலங்கள் உருவாக்கப்பட்ட ஆண்டு

(A) 2000 (B) 2001 (C) 2002 (D) 2003

இந்திய அரசியலமைப்பின் 243 D விதி வலியுறுத்துவது

(A) பஞ்சாயத்து அமைப்பின் பதவி காலம் நிர்ணயம்

(B) பஞ்சாயத்தில் SC/ST வகுப்பினர் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு முறை

2005 ம் ஆண்டைய தகவல் உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது

(A) 11 அக்டோபர் 2005 (B) 12 அக்டோபர் 2005

நிர்வாக கண்காணிப்பு பிரிவு ஏற்படுத்தப்பட்ட ஆண்டு

(A) ஆகஸ்ட் 1955 (B) செப்டம்பர் 1955

பின்வருவனவற்றுள் எந்த ஒன்று பஞ்சாயத்து அலகிற்கான மக்கள் தொகை அளவு 1500-ல் இருந்து 2000-க்குள் இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது

(A) பல்வந்த் ராய் மேத்தா குழு 1957

(B) காங்கிரஸ் கிராம பஞ்சாயத்து குழு 1954

(C) அசோக் மேத்தா குழு

ஜில்லா பரிசத் என்பது இதன் வளர்ச்சி மற்றும் பராமரிப்பிற்கு பொறுப்பாகும்

(A) சர்வதேச நெடுஞ்சாலைகள்

(B) தேசிய நெடுஞ்சாலைகள்

(C) மாநில நெடுஞ்சாலைகள்

(D) மாவட்ட சாலைகள்

பல்வந்த்ராய் மேத்தா குழுவின் பரிந்துரைகளின் படி ஷில்லா பரிசத்தின் தலைவராக செயல்பட வேண்டியவர்

(A) எம்.எல்.ஏ (B) எம்.பி

(C) பஞ்சாயித்து தலைவர் (D) மாவட்ட ஆட்சித்தலைவர்

மிசோரம் ஒரு முழு மாநிலமாக அந்தஸ்து பெற்ற ஆண்டு

(A) 1956 (B) 1971

(C) 1987 (D) 1988

பின்வருவனவற்றை பொருத்தி சரியானவற்றை தேர்ந்தெடு :

(a) 7 வது அ.அ. திருத்தம் — 1. உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 60 லிருந்து 62 ஆக உயர்த்தியது

(b) 12 வது அ.அ. திருத்தம் — 2. பாண்டிச்சேரி யூனியன் பிரதேசமாக சேர்க்கப்பட்டது .

(c) 14 வது அ.அ. திருத்தம் — 3. மாநிலங்கள் மறுசீரமைப்பு

(d) 15 வது அ.அ. திருத்தம் — 4. கோவா யூனியன் பிரதேசமாக சேர்க்கப்பட்டது

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |

லோக்பால் மசோதாவை பாராளுமன்றத்தில் ஏழாவது முறையாக அறிமுகப்படுத்திய இந்திய பிரதமர் யார்?

(A) சந்திரசேகரன்
(B) தேவகௌடா
(C) ஏ.பி. வாஜ்பாய்
(D) டாக்டர். மன்மோகன் சிங்

பின்வரும் எந்த விதி ஹிந்தியை அலுவல் மொழியாக அங்கீகரிக்கின்றது

(A) விதி 356
(B) விதி 370
(C) விதி 360
(D) விதி 343

பின்வருபவனுள் யார் ஐந்தாண்டு திட்டங்களை இறுதியாக அங்கீகரிக்க முடியும்?

(A) பாராளுமன்றம்
(B) திட்டக்குழு
(C) நிதிக் குழு
(D) தேசிய வளர்ச்சி குழு

தேசிய வளர்ச்சி குழுமம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?

(A) 3 மார்ச் 1951
(B) 2 ஜுன் 1952
(C) 6 ஆகஸ்ட் 1952
(D) 5 டிசம்பர் 1953

ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஆரம்பத்தில் பாராளுமன்ற ஒப்புதலுடன் —— காலத்திற்கு விதிக்கப்படலாம்.

(A) மூன்று மாதங்கள்
(B) இரண்டு ஆண்டுகள்
(C) ஆறு மாதங்கள்
(D) ஒன்பது மாதங்கள்

பின்வரும் வரிகளில் எந்த ஒன்று 88வது அரசியலமைப்பு திருத்த சட்டம் 2003–ன் மூலம் அரசியலமைப்பு அந்தஸ்தினைப் பெற்றது?

(A) வருமான வரி
(B) சேவை வரி
(C) தொழில் வரி
(D) நிறுவன வரி

கீழ் வருபவனவற்றை பொருத்தி சரியான விடையை தேர்வு செய்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | ஷா நவாஸ் குழு | 1. | சமூக மற்றும் கல்வி ரீதியில் பின் தங்கியவர்களை கண்டறிதல் |
| (b) | காகா கேல்கர் ஆணையம் | 2. | நெருக்கடி நிலையின் போது நடைபெற்ற அத்து மீறல்களை விசாரணை செய்ய |
| (c) | ஷா ஆணையம் | 3. | பாபர் மசூதி இடிப்பினை விசாரணை செய்ய |
| (d) | லிபரான் ஆணையம் | 4. | சுபாஷ் சந்திர போஸின் மரணத்தை விசாரணை செய்ய |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 4 | 1 | 2 | 3 |

குடியரசுத் தலைவரின் நியமன அதிகாரங்களை பற்றிய பட்டியல் I மற்றும் பட்டியல் II–ல் உள்ளவற்றை பொருத்துக.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | நிதிக்குழுவின் உறுப்பினர்கள் | 1. | பிரிவு 324 |
| (b) | தேர்தல் குழுவின் உறுப்பினர்கள் | 2. | பிரிவு 338 |
| (c) | மத்திய பொதுப்பணி குழு உறுப்பினர்கள் | 3. | பிரிவு 316 |
| (d) | அட்டவணைப்பட்டியல் சாதிக்குழுவின் உறுப்பினர்கள் | 4. | பிரிவு 280 |

தொகுப்பு :

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 1 | 3 | 2 |

கட்சித்தாவல் குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் உள்ளவர் யார்?

(A) சம்பந்தப்பட்ட அவையின் தலைவர் அல்லது சபாநாயகர்

இந்தியா சுதந்திரம் அடைந்த பொழுது கீழ்க்கண்ட அரசியல் கட்சிகளில் எந்தக் கட்சி இங்கிலாந்தில் ஆட்சியில் இருந்தது?

(A) கன்சர்வேடிவ் கட்சி
(B) சோஷியலிஸ்ட் கட்சி
(C) லேபர் கட்சி
(D) லிபரல் கட்சி

லோக்சபா (மக்களவை) செயலகத்தின் தலைவர்

(A) மக்களவை சபாநாயகர்
(B) மக்களவை செயலர்
(C) மக்களவை பொதுச் செயலர்
(D) மக்களவை துணை சபாநாயகர்

எந்த ஆண்டு தேசிய அட்டவணை சாதியினர் மற்றும் பழங்குடியினர் ஆணையம், இரண்டாக பிரிக்கப்பட்டது?

(A) 1960
(B) 1970
(C) 1980
(D) 1990

பின்வருவனவற்றுள் எந்த விதி மாநிலங்களவை கலைக்கப்பட கூடாது என்று கூறுகிறது?

(A) விதி 83
(B) விதி 84
(C) விதி 90
(D) விதி 91

கீழ்வருபவனவற்றில் எது பொருத்தம் இல்லை?

(A) ஹெல்ட் – ஜனநாயகத்தின் மாதிரிகள்
(B) மேக்பர்சன் – ஜனநாயக பங்களிப்பு
(C) லிவ்வி – ஜனநாயகம்
(D) ஸ்கம்பீட்டர் – முதலாளித்துவம், சமதர்மம் மற்றும் மக்களாட்சி

தேர்தல் குழுவின் தலைவர்களை வரிசைப்பிரகாரம் பட்டியலிடுக :

1. டி.எஸ். கிருஷ்ண மூர்த்தி
2. டி.என். சேஷன்
3. சுகுமார் சென்
4. திருமதி. வி.எஸ். ரமா தேவி

(A) 3 – 4 – 2 – 1
(B) 4 – 3 – 2 – 1

ரஷ்யாவை தவிர்த்து மெக்சிகோவில் முதன்முதலாக கம்யூனிச கட்சியை ஆரம்பித்தவர் யார்?

(A) காரல் மார்க்ஸ்

(B) எம்.என். ராய்

(C) லெனின்

(D) ஸ்டாலின்

குடியரசுத் தலைவர் மற்றும் அமைச்சரவை குழுக்களுக்கும் இடையே உள்ள உறவுகளை எந்த பிரிவுகள் விவரிக்கின்றன?

(A) 71, 75 மற்றும் 78

(B) 72, 75 மற்றும் 78

(C) 73, 75 மற்றும் 78

(D) 74, 75 மற்றும் 78

உலகில் தற்பொழுது அதிக சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடாக எது தோன்றியுள்ளது?

(A) ருஷ்யா

(B) அமெரிக்கா

(C) இந்தியா

(D) பிரேசில்

இந்திய அரசியலமைப்பு சட்ட விதி 280 விவாதிப்பது

(A) நிதி ஆயோக்

(B) நிதி ஆணையம்

இந்திய அரசியலமைப்பின் மூலாதாரங்களாக கருதப்படும், கீழ்கண்ட இணைகளில் சரியாகப் பொருத்தப்படாதது எது?

(A) சுதந்திரமான நீதித்துறை – அமெரிக்கா

(B) ஒற்றை குடியுரிமை – பிரிட்டன்

(C) பொதுப்பட்டியல் – ஆஸ்திரேலியா

(D) அடிப்படை உரிமைகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் – ரஷ்யா

பின்வருவனவற்றுள் சரியாகப் பொருந்தாத இணை/இணைகள் எது/எவை?

1. மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையம் – அரசியலமைப்பு நிறுவனம்

2. தேர்தல் ஆணையம் – நீதிமுறைச் சார்புடைய அரசியலமைப்பு நிறுவனம்

3. மகளிருக்கான தேசிய ஆணையம் – சட்டப்பூர்வமான குழுமம்

4. அட்டவணை சாதியினருக்கான தேசிய ஆணையம் – ஆலோசனை குழுமம்

(A) 2 மட்டும்

(B) 2 மற்றும் 4 மட்டும்

(C) 4 மட்டும்

உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை அமர்த்துவது தொடர்பாக பின்வருவனவற்றை பொருத்துக.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | விதி 124 | 1. | உயர்நீதிமன்ற நீதிபதிகள் |
| (b) | விதி 217 | 2. | கூடுதல் நீதிபதிகள் |
| (c) | விதி 224 | 3. | தற்காலிக நீதிபதிகள் |
| (d) | விதி 127 | 4. | உச்சநீதிமன்ற நீதிபதிகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |

அரசியலமைப்பு நிர்ணயசபையின் அவைக் குழுவை தலைமையேற்றவர் யார்?

(A) B.R. அம்பேத்கார்

(B) B. பட்டாபி சீதாராமையா

சிக்கிம் இந்திய யூனியனில் எப்பொழுது சேர்க்கப்பட்டது?

(A) 1966

(B) 1971

(C) 1975

எந்த அரசியலமைப்பு சட்ட திருத்தம், டோக்ரி, போடோ, மைதிலி, சாந்தாலி மொழிகளுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது?

(A) 87வது சட்டத்திருத்தம்
(B) 88வது சட்டத்திருத்தம்
(C) 90வது சட்டத்திருத்தம்
(D) 92வது சட்டத்திருத்தம்

பின்வருவனவற்றை பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | போர் அவசரநிலை | 1. | விதி 360 |
| (b) | மாநிலங்களில் அரசியலமைப்பு அவசரநிலை | 2. | விதி 359 |
| (c) | அடிப்படை உரிமைகளை நிறுத்தி வைத்தல் | 3. | விதி 356 |
| (d) | நிதி அவசரநிலை | 4. | விதி 352 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |

மாநில அளவில் பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தல்களை நடத்துவதற்கான தேர்தல் இயந்திரத்தின் சரியான அதிகார படிநிலை வரிசையை தேர்ந்தெடுக்க.

1. முதன்மை தேர்தல் அதிகாரி
2. வாக்குச்சாவடி தலைமை அதிகாரி
3. தேர்தல் பொறுப்பு அலுவலர்
4. வாக்குப்பதிவு அதிகாரி

(A) 1 – 2 – 3 – 4
(B) 1 – 3 – 2 – 4

ஜம்மு மற்றும் காஷ்மீரின் அரசியலமைப்பு பின்பற்றப்பட்ட வருடம்

(A) 1950 (B) 1952

(C) 1954 (D) 1957

பின்வருவனவற்றுள் எந்த குழு(க்கள்) பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளின் உறுப்பினர்களை கொண்டுள்ளன?

1. மதிப்பீட்டு குழு
2. சார்பு சட்டமியற்றல் குழு
3. பொதுக்கணக்கு குழு
4. பொதுத்துறை நிறுவனங்களுக்கான குழு

(A) 1 மற்றும் 4 மட்டும்

(B) 1, 2 மற்றும் 3 மட்டும்

(C) 3 மற்றும் 4 மட்டும்

பின்வருவனவற்றை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | முதல் அட்டவணை | 1. | SCs மற்றும் STs இன் நிர்வாகம் மற்றும் கட்டுபாடு |
| (b) | ஐந்தாவது அட்டவணை | 2. | மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பெயர்கள் |
| (c) | ஏழாவது அட்டவணை | 3. | 74வது அரசியலமைப்பு திருத்தத்தால் சேர்க்கப்பட்ட நகர பாலிகாஸ் |
| (d) | பன்னிரண்டாவது அட்டவணை | 4. | மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான அதிகாரங்களின் பிரிவு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |

பின்வரும் கூற்றினை கருத்தில் கொள்க.

விளைவு : அதிகாரிகளின் நடவடிக்கைகள் மந்திரிகளின் நடவடிக்கைகளை ஒத்து காணப்படுதல்.

காரணம் : பாராளுமன்ற வழக்கப்படி சட்டம் இயற்றுவர்களின் நடவடிக்கைகள், அதிகாரிகளை அல்லாது இயற்றுபவர்களையே தாக்கும் குணமுடையது.

(A) விளைவும் காரணமும் சரியே, விளைவுக்கு உண்டான காரணம் இதுவே

சரியானவற்றை பொருத்துக :

| | அதிகார அமைப்புகள் | | விதிகள் |
|---|---|---|---|
| (a) | இந்தியாவின் கணக்கு மற்றும் தணிக்கை கட்டுப்பாட்டு தலைமை அதிகாரி | 1. | (280) ம் விதி |
| (b) | இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர் | 2. | (344) ம் விதி |
| (c) | நிதி ஆணையம் | 3. | (76) ம் விதி |
| (d) | அங்கீகரிக்கப்பட்ட மொழிகளுக்கான ஆணையம் | 4. | (148) ம் விதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |

பொதுப் பட்டியலில் உள்ளடங்கியுள்ள துறை எது?

(A) குடியுரிமை

(B) மாநிலங்களுக்கிடையேயான ஆறுகள்

(C) தொழிற்சங்கங்கள்

(D) அகில இந்திய பணிகள்

இந்தியாவில் நடந்த பல்வேறு தேர்தல்களில் பின்பற்றப்பட்ட தேர்தல் முறை எது?

1. வயது வந்தோருக்கான நேரடி தேர்தல் முறை.
2. ஒற்றை மாற்று வாக்களிக்க வகை செய்யப்பட்ட விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை.
3. விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை.
4. மறைமுக தேர்தல் அடுக்கு முறை.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வரிசையின் சரியான விடையை தேர்ந்து எடுக :

வரிசை :

(A) 1 மற்றும் 2     (B) 1 மற்றும் 3

(C) 1, 2 மற்றும் 3     (D) 2, 3 மற்றும் 4

மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் உருவாக்கப்பட்டது

(A) 1964     (B) 1963

(C) 1962     (D) 1960

இராஜீவ் காந்தி பிரதமராக நியமனம் செய்யப்பட்ட நாள்

(A) 31–ம் நாள், அக்டோபர், 1984     (B) 31–ம் நாள், செப்டம்பர், 1984

(C) 31–ம் நாள், நவம்பர், 1984     (D) 31–ம் நாள், டிசம்பர், 1984

பின்வரும் கூற்றினை கருத்தில் கொள்க.

இந்தியாவில் தலைமை கணக்கர் மற்றும் தணிக்கை அதிகாரியின் அனைத்து அறிக்கைகளும்.

1. மத்திய மற்றும் மாநிலங்களின் அனைத்து கணக்குகளும் இந்திய குடியரசுத் தலைவருக்கு சமர்பிக்கப்படுதல்.
2. மாநிலத்தின் கணக்கு தொடர்பானவை அனைத்தும் மாநில ஆளுநருக்கு சமர்பிக்கப்படுதல்.
3. மாநிலங்களின் கணக்கு மத்திய நிதி அமைச்சருக்கு சமர்பிக்கப்படுதல்.

மேற்சொன்ன கூற்றுகளில் எவை சரியானது?

(A) 1 மட்டும்     (B) 2 மட்டும்

(C) 3 மட்டும்     (D) 1 மற்றும் 3 மட்டும்

இரண்டாவது நிர்வாக சீர்திருத்த ஆணையம் இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட ஆண்டு

(A) 2006     (B) 2007

(C) 2008     (D) 2005

இந்திய அரசியலமைப்பு இவைகளை அங்கீகரிக்கிறது

[A] மத மற்றும் மொழி சிறுபான்மை
(B) மத, மொழி மற்றும் இன சிறுபான்மை
(C) மத சிறுபான்மை மட்டும்
(D) மொழி சிறுபான்மை மட்டும்

கீழ் குறிப்பிட்டவைகளில் எந்த சட்டம் பிரதிநிதித்துவ அமைப்பு மற்றும் சட்டமியற்றும் அதிகார மாற்றத்தை இந்தியாவில் ஏற்படுத்தியது?

(A) 1858–ம் ஆண்டு சட்டம்
[B] 1861–ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம்
(C) 1892–ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம்
(D) 1909–ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம்

எவன்/எவள் தனது நாட்டிற்கு வெளியே இருந்து கொண்டு துன்புறுத்தப்படுவோம் என்ற ஐயப்பாட்டில், பாதுகாப்பினை சட்டப்படி பெற மற்றும் அதற்க்கான தேவையினை பெற்றிருப்பாரோ அவன்/அவள் ஒரு

(A) இடம்பெயர்பவர்
(B) சண்டை பிடிப்பவர்
[C] அகதி
(D) உளவாளி

கீழ்க்கண்டவற்றில் எவர் ஒதுக்கப்பட்ட பிரிவிற்கான சரியான விளக்கம் அல்ல

(A) இவர்கள் மிகவும் சேதமடைந்த பெரும்பாலும் ஏழ்மையானவர்கள்
(B) இவர்கள் பல்வேறு பிரிவினர்களாக இருப்பவர்கள்
(C) ஒழுங்குபடுத்தப்படாத வேலையாட்கள்
[D] கோயில் அர்ச்சகர்கள்

நம்பிக்கையில்லா தீர்மானத்தின் குறிக்கோள்

(A) குறைகளை தீர்ப்பதை நாடுவது
[B] அரசாங்கம் மீதான அதிருப்தி மற்றும் நம்பிக்கையில்லாமையை மெய்பிப்பது

எந்த அரசியலமைப்பு விதியின் கீழ், ஒரு மசோதாவை நிறைவேற்றுவது தொடர்பாக, பாராளுமன்றத்தின் இரு அவைகளுக்குமிடையே ஏற்படும் முட்டுக்கட்டை பாராளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டு சட்டத்தின் மூலம் தீர்த்து வைக்கப்படும்?

[A] 108
(B) 107
(C) 111
(D) 121

பிரதமர் இந்திராகாந்தி உள்நாட்டு நெருக்கடி நிலை பிரகடனம் செய்த ஆண்டு

(A) ஜுன் 1975 (B) ஜுலை 1974
(C) செப்டம்பர் 1975 (D) அக்டோபர் 1975

எந்த அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ், தேசிய தலைநகர் பிரதேச சட்டம் இயற்றப்பட்டது?

(A) 67வது அரசியலமைப்புத் திருத்தம்
(B) 68வது அரசியலமைப்புத் திருத்தம்
(C) 69வது அரசியலமைப்புத் திருத்தம்

கீழ்க்கண்ட இந்திய மாநிலங்களில் தனக்கென தனி அரசியலமைப்பை கொண்டுள்ளது எது?

(A) ஆந்திர பிரதேசம் (B) பஞ்சாப்
(C) தமிழ்நாடு (D) ஜம்மு மற்றும் காஷ்மீர்

இந்தியாவில் முதல் கூட்டணி ஆட்சியை அமைத்தவர் யார்?

(A) தேவ கவுடா (B) வி.பி. சிங்
(C) மொரார்ஜி தேசாய் (D) சரண் சிங்

அதிகார பிரிவினை கோட்பாட்டை உருவாக்கியவர்

(A) மாடிஸன் (B) ப்லாக்ஸ்டோன்
(C) லாக் (D) மான்டெஸ்க்யூ

வெள்ளையனே வெளியேறு இயக்கம் குறித்து பின்வரும் வாசகத்தை கூறியவர் யார்?

"இந்தியாவில் ஆங்கிலேயர்கள் இருப்பது, ஜப்பானை இந்தியா மீது படையெடுத்து வருமாறு அழைப்பது போன்றதாகும். அவர்கள் வாபஸ் பெற்றுச் சென்றால் இந்த அழைப்பு தேவையற்று போகும்".

(A) சி. ராசகோபாலாச்சாரி (B) முகமது அலி ஜின்னா
(C) மகாத்மா காந்தி (D) சர்தார் பட்டேல்

இந்திய அரசியலமைப்பின் ஆறாவது பட்டியலிலுள்ள விதிகள் கீழ்கண்ட எந்தப் பகுதிக்கு பொருந்தக் கூடியது?

(A) சமநிலப் பகுதிக்கு (B) கடற்கரைப் பகுதிக்கு
(C) பழங்குடியினர் பகுதிக்கு (D) பாலைவனப் பகுதிக்கு

பின்வரும் எந்த நாளில், இந்திய உச்ச நீதி மன்றம் தொடங்கி வைக்கப்பட்டது?

(A) 26–ம் நாள், மார்ச், 1950
(B) 26–ம் நாள், பிப்ரவரி, 1950
(C) 26–ம் நாள், ஜனவரி, 1951
(D) 28–ம் நாள், ஜனவரி, 1950

கீழ்க்கண்ட அரசியலமைப்பு தொடர்பான கூற்றுகளை கருத்தில் கொள்க (73–வது அரசியலமைப்பு திருத்த சட்டம்).

1. இந்திய அரசியலமைப்பு விதி 243–1 ன் படி மாநில ஆளுநர் ஒவ்வொரு ஐந்தாண்டிலும், பஞ்சாயத்தின் நிதி நிலையினை மறு ஆய்வு செய்ய ஒரு நிதி ஆணையத்தை ஏற்படுத்துகிறார்.
2. இந்திய அரசியலமைப்பு விதி 243–k ன் படி பஞ்சாயத்து தேர்தலை கண்காணித்தல், வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்றவற்றை மாநில தேர்தல் ஆணையம் தன்னகத்தே வைத்துள்ளது.

கீழ்கண்டவற்றில் எது சரி?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1 மற்றும் 2
(D) 1–ம் இல்லை 2–ம் இல்லை

கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியாக பொருந்துவதை கண்டுபிடிக்கவும்

(A) R.K. பூரி – 1975 ல் தமிழ்நாட்டின் ஆளுநர்
(B) பிமால் ஜலான் – 1997 ல் ரிசர்வ் வங்கியின் ஆளுநர்
(C) Dr. விஜய் கெல்கர் – 12<sup></sup>வது நிதிக்குழுவின் தலைவர்
(D) லால் பகதூர் சாஸ்திரி – இந்தியத் திட்டக்குழுவின் முதல் தலைவர்

இந்தியாவில், எந்த ஐந்தாண்டு திட்டம் 'கல்வியில் விரிவு, தரம், சமநிலை' ஆகியவற்றை வலியுறுத்துகின்றது?

(A) 12 ம் திட்டம்
(B) 11 ம் திட்டம்
(C) 10 ம் திட்டம்
(D) 9 ம் திட்டம்

சட்ட திருத்தம், இந்திய அரசியல் சாசன சட்டத்தில் எந்த விதியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது?

(A) 365
(B) 366
(C) 367
(D) 368

அடிப்படை கடமைகள் என்ற யோசனை கீழ்கண்டவற்றில் எதிலிருந்து பெறப்பட்டது?

(A) அமெரிக்க அரசியலமைப்பு

(B) இங்கிலாந்து அரசியலமைப்பு

(C) USSR அரசியலமைப்பு

1975-ம் ஆண்டு நெருக்கடி நிலை அறிவிப்பு தொடர்பான விசாரணையை மேற்கொள்ள அமைக்கப்பட்ட ஆணையத்தின் பெயர் என்ன?

(A) சர்க்காரியா ஆணையம்

(B) ஷா ஆணையம்

பின்வருவனவற்றுள் எந்த ஒன்று இந்திய அரசியலமைப்பின் பொதுப்பட்டியலின் கீழ் வரவில்லை?

(A) ஒரு மாநிலத்தின் பாதுகாப்போடு தொடர்புள்ள காரணங்களுக்கான தடுப்புக் காவல்

(B) திருமணம் மற்றும் விவாகரத்து

(C) பந்தயம் மற்றும் சூதாட்டம்

"இந்திய அரசியலமைப்பின் கீழ் இந்தியாவின் தலைமை கணக்கு மற்றும் தணிக்கை அதிகாரி அலுவலகம் மிக முக்கியமானது" என்று கூறியவர் யார்?

(A) டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

இந்திய அரசியலமைப்பின் எந்த பகுதி நிர்வாக தீர்ப்பாயங்களைப் பற்றி கூறுகின்றது?

(A) பகுதி XI-A

(B) பகுதி XIV-A

குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை 1966-ஐ இந்தியா எந்த ஆண்டு ஏற்றுக் கொண்டது?

(A) 1950

(B) 1966

(C) 1979

ஜமீந்தாரி முறை ஒழிப்பு மற்றும் நிலச்சீர்திருத்த சட்டத்தை அனைத்து இந்திய மாநிலங்களும் அமல்படுத்திய ஆண்டு எது?

(A) 1950

(B) 1951

(C) 1952

1950-ஆண்டில் திட்டகுழு இவரால் அமைக்கப்பட்டது

(A) B.S. மின்காஸ்

(B) ஜவஹர்லால் நேரு

'தகவல் அறியும் உரிமை சட்டம் 2005' – எத்தனை அட்டவணைகளை கொண்டுள்ளது?

(A) 4

(B) 3

(C) 2

எத்தனையாவது மக்களவையின் பதவிக்காலம் அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள ஐந்து ஆண்டுகளை தாண்டி கூடுதலாக நீட்டிக்கப்பட்டது?

(A) IV

(B) V

வரிசை I–டன் வரிசை II – ஐப் பொருத்தி சரியான விடையை தேர்ந்தெடுக்க :

| | வரிசை I | | வரிசை II |
|---|---|---|---|
| (a) | மேம்பாட்டிற்க்குரிய உரிமை மீதான பிரகடனம் | 1. | 1992 |
| (b) | சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு மீதான பிரகடனம் | 2. | 1965 |
| (c) | அனைத்து வகையான இன பாகுபாட்டை ஒழிப்பதற்கான சர்வதேச மாநாடு | 3. | 1986 |
| (d) | மகளிர்க்கு எதிரான அனைத்து வகை பாகுபாட்டிற்கு ஒழிப்பதற்கான மாநாடு | 4. | 1979 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 3 | 1 | 2 | 4 |

குடியரசுத் தலைவர் பதவி காலியாகும் போது, அப்பதவியை ஏற்கும் துணை குடியரசு தலைவர் அப்பதவியில் இருப்பது

(A) புதிய குடியரசு தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை

(B) புதிய குடியரசு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அலுவல் பொறுப்பு ஏற்கும் வரை

பின்வருவனவற்றுள் எது 26 ஜனவரி 1950 அன்று படி இந்திய அரசியலமைப்பு முகவுரையில் சரியானது?

(A) இறைமை, சமயசார்பின்மை, குடியரசு

(B) இறைமை, சமதர்மம், சமயசார்பின்மை

(C) இறைமை, சமயசார்பின்மை, சமதர்மம், மக்களாட்சி, குடியரசு

(D) இறைமை, மக்களாட்சி, குடியரசு

கீழ்வருபவைகளில் எது 'வளைவு' கூட்டம் எனப்படுகிறது?

(A) அரசியல் கட்சிகள்

(B) எஐடியுசி

(C) மாணவர்கள் சங்கம்

(D) மனித உரிமைகள் பாதுகாப்பு சங்கம்

கீழ்வருபவனவற்றில் எந்த சட்ட திருத்தத்தில், மத்திய மொத்த தொகுப்பிலிருந்து 29% மிகையாமல் மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது?

(A) 80 வது சட்டத்திருத்தம்

1990–ம் ஆண்டு மாநிலங்களிடை மன்றம் ஏற்படுத்தப்பட்டது

(A) அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம்

(B) குடியரசு தலைவரின் உத்தரவு மூலம்

பின்வரும் இந்திய பாராளுமன்ற குழுக்களில் எந்த ஒன்று நிதி விவகாரங்களுடன் தொடர்புடையது அன்று?

(A) பொது கணக்கு குழு

(B) மதிப்பீட்டுக் குழு

(C) பொதுத்துறை நிறுவனங்களுக்கான குழு

(D) அரசு உத்தரவாதங்களுக்கான குழு

உச்ச நீதிமன்றம் கூறிய தீர்ப்பு – மக்களாட்சியில் பேச்சுரிமை மற்றும் உணர்வுரிமை தவிர்க்க முடியாதவை இந்த தீர்ப்பு எந்த வழக்கை குறிக்கும்?

(A) பிரபு தத் V இந்திய அரசாங்கம்

(B) ரோமேஷ்தாபர் V மதராஸ் மாநிலம்

பம்பாய், கல்கத்தா மற்றும் சென்னை உயர்நீதிமன்றங்கள் —————— கீழ் உருவாக்கப்பட்டன.

(A) இந்திய உயர்நீதி மன்றங்கள் சட்டம், 1861

கீழ்காணும் இரண்டு வாக்கியங்களில் சரியான விடையை மதிப்பீடு செய்க. மேலும் இங்கு கொடுக்கப்பட்டுள்ள தொகுப்புகளில் இருந்து சரியான விடையை தேர்ந்தெடுக்க.

கூற்று (A) : மத்திய – மாநில உறவுகளை மறுசீராய்வு செய்வதற்கான கோரிக்கைகள் வலுப்பெறுகின்றன.

காரணம் (R): மாநிலங்களில் மேம்பாட்டு திட்டங்களை ஏற்படுத்துவதற்கான போதிய வாய்ப்பு வளங்கள் இல்லாமை.

(A) (A) மற்றும் (R) சரியே, (R) என்பது (A) வின் சரியான விளக்கம் ஆகும்

பின்வருவனவற்றுள் எந்த மசோதாக்கள் பாராளுமன்ற கூட்டுக் கூட்டத்தால் நிறைவேற்றப்பட்டவை?

(A) இந்து சட்ட தொகுப்பு மசோதா, பயங்கரவாத தடுப்பு மசோதா, பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா

(B) வரதட்சனை தடை மசோதா, பஞ்சாயத்து இராஜ் மசோதா, கட்சித்தாவல் தடை மசோதா

(C) வரதட்சனை தடை சட்டம், வங்கிப் பணிகள் ஆணையம் (இரத்து) மசோதா, பயங்கரவாத தடுப்பு மசோதா

இந்திய அரசியலமைப்பு வரைவுக் குழுவின் தலைவர்

(A) டாக்டர். இராஜேந்திர பிரசாத்

(B) ஜவஹர்லால் நேரு

(C) டாக்டர் பி.ஆர். அம்பேத்கார்

எந்த வருடம் இந்திய அரசியல் அமைப்பு சட்டம் (61வது திருத்தச் சட்டம்) படி வாக்குரிமை வயது 21 வயதிலிருந்து 18 ஆக குறைக்கப்பட்டது?

(A) 1988

இந்திய அரசியல் அமைப்பின் சரத்து 63 குறிப்பிடுவது

(A) துணை குடியரசுத் தலைவர்

நித்தி அயோக்-இன் தலைவர் யார்?

(A) குடியரசு தலைவர்

(B) பிரதம மந்திரி

ஆட்கொணர் நீதி பேராணை என்பது

(A) சட்டத்திற்கு புறம்பாக கைது செய்வதிலிருந்து மக்களை பாதுகாத்தல்

| பகுதி-I | | பகுதி-II | |
|---|---|---|---|
| (a) | ராஜ்பவன் | 1. | ஜனாதிபதி |
| (b) | ராஷ்டிரபதி பவன் | 2. | ஆளுநர் |
| (c) | இராஜதுரோக விசாரணை | 3. | யூனியன் பிரதேசங்கள் |
| (d) | துணைநிலை ஆளுநர் | 4. | அரசியலமைப்பு மீறல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

மாநில அளவில் தேர்தல் நடைமுறையை மேற்பார்வையிடுபவர்

(A) தலைமை தேர்தல் ஆணையர்

(B) உச்சநீதிமன்ற நீதிபதி

(C) தலைமை தேர்தல் அதிகாரி

சரியான வாக்கியத்தை கண்டுபிடி.

இந்திய அரசியலமைப்பு ———————— கொண்டுள்ளது.

(A) XXII பாகங்கள், 449 சரத்துகள் மற்றும் 12 அட்டவணைகள்

பின்வருவனவற்றுள் பொருந்தாதது எது?

(A) காந்தியடிகள் படுகொலை – ஜனவரி 30, 1948

(B) குடியரசு தினம் – ஜனவரி 26, 1950

(C) சுதந்திர தினம் – ஆகஸ்டு 15, 1947

(D) தேசிய கீதத்தை அரசியல் நிர்ணய சபை ஏற்றுக்கொள்ளுதல் – ஜனவரி 23, 1950

பின்வருவனவற்றுள் எது சரியாக பொருந்தியுள்ளது?

(A) குடியரசுத் தலைவர் – அரசியலமைப்பின் பாதுகாவலர்

(B) முதலமைச்சர் – ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்

(C) உச்சநீதிமன்றம் – சிறப்பான அடையாளங்கள்

(D) தேசிய கீதம் – பக்கிம் சந்திர சட்டர்ஜி

நுகர்வோர் நீதிமன்றங்கள் ———— அடுக்குகளாக அமைக்கப்பட்டுள்ளன.

(A) 2

(B) 3

'சத்யமேவ ஜெயதே' என்ற அரசுக் குறிக்கோளை தமிழில் வாய்மையே வெல்லும் என்று மாற்றியவர்

(A) அரவிந்த் கோஷ் (B) பெரியார்

(C) காமராசர் (D) அண்ணாதுரை

"நம் வாழ்வில் ஒளி மறைந்து எங்கும் இருள் சூழ்ந்து விட்டது" எனக் கூறியவர் யார்?

(A) வல்லபாய் படேல்

(B) Dr. ராஜேந்திர பிரசாத்

(C) மவுண்ட் பேட்டன்

(D) ஜவஹர்லால் நேரு